மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மூலக் கேள்விக்கும் இதற்கும் தொடர்பு இல்லை. மூலக்கேள்வி ஜனவரித் திங்களிலிருந்து ஜூன் திங்கள் வரை வாங்கப்பட்ட உரிமங்கள் பற்றியது. ஆகவே, தொழில்துறை பற்றிய எல்லா கேள்விகளுக்கும் இப்பொழுதே பதில் அளிப்பது இயலாது. எனவே, கனம் உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போட்டால் விவரம் அறியலாம்.

மீனாட்சி கோயில் தேவஸ்தான ஊழியர்கள்

* 72 வினா.—**திரு. என். சங்கரய்யா** : மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மீனாட்சி கோயில் தேவஸ்தான ஆலய ஊழியர்களிடமிருந்து சம்பள அமைப்பு திருத்தி உயர்த்தப்பட வேண்டுமென்றும், உரிய பஞ்சப்படி கொடுக்கப்பட வேண்டுமென்றும் கோரி அண்மையில் அரசாங்கத்திற்கு விண்ணப்பம் ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம், வந்துள்ளது.

(இ) இம் முறையீடு பற்றி தம் கருத்துக்களைத் தெரிவிக்குமாறு இந்து சமய அறக்கட்டளைகள் ஆட்சித் துறையின் ஆணையாளர் கேட்கப்பட்டார். கோவில் ஊழியர்கள் சம்பளம், அகவிலைப்படி முதலியவற்றைத் திருத்தி அமைப்பது குறித்து கோவில் நிர்வாக அதிகாரி நடவடிக்கை எடுப்பதாக ஆணையாளர் அறிவித்துள்ளார்.

திரு. என். சங்கரய்யா : மதுரை மீனாட்சி ஆலய தேவஸ்தான ஊழியர்கள், இராமேசுவரம் தேவஸ்தான ஊழியர்களுக்கு, அரசு ஊழியர்கள், நகரசபை ஊழியர்கள் எந்தப் பொறுப்பில் பணியாற்றுகிறார்களோ, அதே பொறுப்பு அவர்களுக்கும் ஏற்பட்டிருக்கக்கூடிய காரணத்தினால், அரசாங்க ஊழியர்களைப் போல் இவர்களுக்கும் பஞ்சப்படியும், சம்பளமும் அமைப்பதற்கான ஒரு ஏற்பாட்டை இந்தத் துறை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எந்த அடிப்படையில் இது வைக்கப்பட்டிருக்கிறது என்ற விவரக் குறிப்பு இல்லை. ஆனால் அவை பற்றி அரசு பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். இந்தக் கோவில்களில் வைக்கப்பட்டிருக்கிற சில முறைகளைப் பொருத்து, அவர்கள் கேட்டிருக்கிற கோரிக்கைகள் எந்த

1968 பிப்ரவரி 19]

அளவுக்கு நிறைவேற்றப்படலாம் என்று பரிசிலிக்க அறநிலேயப் பாதுகாப்புத் துறை மேற்கொண்டு, அதுபற்றிய நடவடிக்கைகள் எடுப்பதில் நிர்வாகிகள் இப்பொழுது ஈடுபட்டிருக்கிறார்கள்.

DR. H. V. HANDE : Sir, recently an Archakars' Mahanadu was held and it was addressed by the Hon. Minister for Industries and I also participated in that Mahanadu. In that Mahanadu a number of requests were made by the members of that Association. In view of the fact that there are some funds with the Religious Endowments Board and in view of the fact that these archakars have lost all the advantages that they had got in the olden days by way of traditional rights, will this Government re-examine their difficulties and accept liberally whatever demands that they make.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த மகாநாட்டில் அர்ச்சகர்கள் சிலபல கோரிக்கைகளைத் தந்திருக்கிறார்கள். அவைகள் இப்பொழுது இந்த இலாக்காவின் பரிசிலனையில் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பரிசிலனை முடிந்த பின்னுல், இதுபற்றி என்ன செய்யலாம் என்று யோசிக்கலாம்.

சங்க காலத்து நாணயங்கள்

* 73 வினு—திரு. பெ. மலேச்சாமி : மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா —

(அ) சங்க காலத்து நாணயங்கள் வடார்க்காடு மாவட்டம், ஆண்டிப் பட்டியில் அண்மையில் கண்டெடுக்கப்பெற்றன என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், எத்தனை நாணயங்கள் ?

(உ) அவை பண்டைய வரலாற்றினைத் தொகுப்பதில் எப்படி உதவுகின்றன ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) 143 ஈய நாணயங்கள்.

(உ) இந்த நாணயங்கள் வரலாற்று முறையிலும், எழுத்தியல் வகையிலும் சுவையுடையவையாகும். அந்த நாணயங்களின் மேல் பிராமி எழுத்துக்கள் காணப்படுகின்றன. இந்த நாணயங்கள் சென்னைப் பொருட்காட்சிசாலைக்கெனப் பெறப்பட்டுள்ளன. இவை சங்க காலத்தைச் சேர்ந்தவையா இல்லையா என்பது இன்னும் உறுதியாகவில்லை. இந்த நாணயங்களின் வரலாற்று முக்கியத்துவம் பற்றி சென்னைப் பொருட்காட்சி சாலையில் விரிவாக ஆராயப்பட்டு வருகிறது. இந்த நாணயங்களின்